**<u>கூடுதல் சார்பு நீதிமன்றம், பழனி</u>**

**<u>S.C.No.56/2020</u>**

**தேதி** – 07.08.2025

**(அ.சா.4)** – திரு.கவின்குமார்

**<u>எதிரிகள் – ஆஜர்</u>**

சாட்சி மனுவின்பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்து வைக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

**<u>குறுக்கு விசாரணை:</u>**

1. என்னுடைய சொந்த வீடு பழைய ஆயக்குடியில் உள்ளது. பழைய ஆயக்குடியில் எத்தனை வருடமாக குடியிருந்தோம் என்றால் எனக்கு சிறு வயது என்பதால் ஞாபகமில்லை. மடத்தில் குடியிருப்பதற்கு தனியாக வீடு இல்லை. அதில் இருந்த ஒரு அறையில் குடியிருந்தோம். ஆயக்குடியில் இருந்த வீட்டில் அனைத்து வசதிகளும் உள்ளது என்றால் சரிதான். என் தாயாரை தாக்கியபோது எனக்கு எத்தனை வயது என்றால் 17 வயது. மடத்தில் என்னென்ன கடைகள், எத்தனை அறைகள் உள்ளது என்ற விபரம் பற்றி எனக்கு சரியாகத் தெரியாது.

2. சம்பவ சமயம் நான் அக்சயா மேல்நிலைப்பள்ளியில் பிளஸ் 1 படித்துக்கொண்டிருந்தேன். சம்பவ சமயம் மடத்தின் பொறுப்பாளர்கள் யார், மடத்தை யார் குத்தகைக்கு எடுத்துள்ளார்கள் என்பதை பற்றி என் பெற்றோரிடம் கேட்டு தெரிந்துகொண்டேனா என்றால் அப்போது மேற்படி விபரங்கள் எனக்கு தெரியாது. மடத்தை யார் பராமரிக்கிறார்கள் என்றால் நானும், என் தாயாரும் பராமரித்தோம். என் மாமா மடத்தை குத்தகைக்கு எடுத்திருந்தார். எத்தனை வருட குத்தகை என்று எனக்கு தெரியவில்லை. மடத்தை ஒட்டிய சாலையில் மக்கள் நடமாட்டம் அதிகம் இருக்கும் என்றால் ஓரளவுக்கு இருக்கும்.

3. அந்த சாலை வழியாகத்தான் பழனி கோவில் நுழைவாயிலுக்கும், பழனி அடிவாரம் காவல் நிலையத்திற்கும், அருகில் உள்ள தங்கும்

விடுதிகளுக்கும் மற்றும் கடைகளுக்கும் செல்லமுடியும் என்று சொன்னால் சரிதான். அன்றைய தினம் மண்டபம் முழுவதற்குமே மின்சாரம் இல்லாமல் இருந்தது. 2,3 நாட்களாக மின்சாரம் வந்து சென்றுகொண்டிருந்தது. அன்றைய தினம் 11.00 மணியளவில் சம்பவம் நடந்ததாகச் சொன்னார்கள். EB பணியாட்கள் வந்தார்களா என்று எனக்கு தெரியாது. என்னுடைய தாயாரை தாக்கியதாகச் சொல்லும் நேரம் என்னவென்றால் அதுதான் 11.00 மணிக்குமேல் நடந்தது. அப்போது நான் வீட்டில் படித்துக்கொண்டிருந்தேன். மேற்படி சம்பவம் குறித்து நான் புகார் எதுவும் கொடுக்கவில்லை. என் தாயாரோ மற்றவர்களோ புகார் கொடுத்தார்களா என்ற விபரம் தெரியாது.

4. EB பணியாட்கள் எத்தனை மணிக்கு வந்தார்கள் என்று எனக்கு தெரியாது. மின்சாரப் பிரச்சனை அன்றைய தினமே சரிசெய்யப்பட்டதா என்றால் சம்பவம் நடந்த காரணத்தால் அது பற்றி நான் தெரிந்து கொள்ளவில்லை. பின்னிட்டு மின்சாரம் எப்போது சரி செய்யப்பட்டது என்று எனக்கு தெரியாது. என் தகப்பனார் எத்தனை மணிக்கு பணிக்குச் செல்வார் என்றால் அன்றைய தினம் அதிகாலையிலேயே பணிக்குச் சென்றுவிட்டார். நேரம் சரியாகத் தெரியாது. அதிகாலையில் அவர் பணிக்குச் சென்றுவிடுவார் என்று தெரியும். நான் காலையில் 7.00 மணிக்குத்தான் எழுவேன் என்பதால் அவர் குறிப்பிட்டு எத்தனை மணிக்கு பணிக்குச் செல்வார் என்று எனக்கு தெரியாது.

5. என் தகப்பனார் எனக்கு விபரம் தெரிந்து 2007–2008 வருடங்கள் முதலே வேலைக்குச் செல்கிறார். என் தகப்பனார் எத்தனை மணிக்கு வேலைக்குச் செல்கிறார் என்று நான் கேட்டுத் தெரிந்துகொள்ளவில்லை. என் தகப்பனார் வேலை முடித்து எத்தனை மணிக்கு வருவார் என்றால் அன்றைய தினம் 2.00 மணிக்கு முன்பாகவே வந்துவிட்டார். குறிப்பிட்டு எத்தனை மணி என்றால் எனக்கு தெரியாது. நான் 2 வது எதிரியின் தாயாரிடம் என் தாயாரிடம் அவர் சண்டையிட்டது குறித்து கேட்டுத்தெரிந்துகொள்ளவில்லை. EB லைன் கம்பம் வரை 2 வது எதிரி தகரம் வைத்து அடைத்திருந்தார். 1 வது எதிரி அந்த

கடையின் அருகில் பெட்டிக்கடை வைத்திருந்தார். அந்த பெட்டிக்கடை மடத்திற்கு சேர்ந்தது அல்ல என்றால் சரிதான். மடத்தில் ஒரு ஹோட்டல் கடை அச்சமயம் இருந்தது.

6. அ.சா.5 முதல் அ.சா.10 வரையிலான சாட்சிகள் எங்கள் உறவினர்கள். சம்பவம் நடந்ததாகச் சொல்லப்படும் நேரம் நான் மண்டபத்திற்கு வெளியில் சம்பவம் நடந்த இடத்தின் அருகில்தான் இருந்தேன். அப்போது எத்தனைபேர் இருந்தார்கள் என்றால் 5,6 நபர்கள் இருந்தார்கள். என் தகப்பனாரை யார் யார் மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றோம் என்றால் எங்களுடைய உறவினரின் இருசக்கர வாகனத்தில் நானும் என்னுடைய மாமா மகன் கணேஷ் என்பவரும் அழைத்துச் சென்றோம். மேற்படி யாருடைய வாகனம் யாருடையது என்னால் குறிப்பிட்டுச் சொல்ல இயலாது. என் தகப்பனாரிடம் போலீசார் புகார் வாக்குமூலம் பெற்றபோது நான் உடனில்லை. நான்தான் என் அப்பாவை மருத்துவமனையில் சேர்த்தேன். அப்போது என்னுடைய தாயார் காவல் நிலையத்திற்கு சென்றுவிட்டதால் அருகில் இல்லை.

7. என் தாயார் அரசு மருத்துவமனைக்கு வந்தார் என்றால் காவல் நிலையம் சென்றுவிட்டு சிறிது நேரம் சென்று வந்தார். 2ம் எதிரியின் சகோதரர் அருகில் அவர் வைத்திருந்த டீ கடையிலிருந்து வந்தார். எத்தனை காலமாக அவர்கள் டீ கடை வைத்துள்ளார்கள் என்று எனக்கு தெரியாது. நானும் என் தாயாரும் என் அப்பாவிற்கு போன் செய்து பிரச்சனை பற்றி சொன்னோம். அந்த நேரம் சரியாகத் தெரியாது. என் தகப்பனாருக்கு தகவல் தெரிவித்த பிறகு மடத்தின் நிர்வாகிகளுக்கு நாங்கள் தகவல் சொன்னோம். என் தகப்பனார் வந்தபோது மடத்தின் தலைவர், செயலாளர், பொருளாளர் மற்றும் 4,5 பேர் இருந்தார்கள். தற்போதும் நாங்கள் மடத்தில்தான் குடியிருக்கிறோமா என்றால் ஆம்.

8. தற்போது மடத்தை என் மற்றொரு மாமாவான மணி என்பவர் குத்தகைக்கு எடுத்துள்ளார். நாங்கள் குடியிருப்பதற்கு வாடகை செலுத்துகிறோமா என்றால் எனக்கு தெரியாது. பொதுக்கழிப்பிடம் மடத்திலிருந்து சுமார் 100 மீட்டர் தூரத்தில் இருக்கும். நான் சொல்வதுபோல் எவ்வித சம்பவமும் நடைபெறவில்லை என்றும், மடத்தின் நிர்வாகிகள் சொன்னதுபோல் என் தகப்பனார் புகார் கொடுத்துள்ளார் என்றும் அதற்கு ஆதரவாக நான் பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. இந்த வழக்கிற்கும் எதிரிகளுக்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. போலீசார் என்னென்ன கைப்பற்றினார்கள் என்று எனக்கு அப்போது சிறுவயது என்பதால் சரியாகத் தெரியவில்லை.

K. BHARATHI
Digitally signed by K. BHARATHI
Date: 2025.08.07 18:50:05 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
பழனி.